## கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு
## வழக்கு எண் - O.S.No.232/2018 P.W.1

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.D.கோவர்த்தனகிரி, என்பவரால் வாக்குமூலம் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதிகள் தரப்பில் சாட்சியின் வாக்குமூலம் 1873-ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | விநாயகம் | தொழில்: | |
| த/பெ.: | | மதம்: | |
| கிராமம்: | | ஜாதி: | |
| வயது: | | வட்டம்: | |

**முதல் விசாரணை: - 04.07.2022**

நான் இந்த வழக்கின் இரண்டாம் வாதியின் கணவர். 1, 2 வாதிகளுக்காக இன்று பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். 1 முதல் 19 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அவற்றை வாதிகள் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 06.10.1964 – Xerox copy of Settlement deed Doc.No.3215/1964 – Ex.A.1.

2. Certified copy of Endorsement of Sub Register – Ex.A.2.

3. 17.07.1979 - Original Mortgage deed Doc.No.1374/79 – Ex.A.3.

4. 27.08.1986 - Original Mortgage deed Doc.No.2925/86 – Ex.A.4.

5. 22.01.1997 - Original Mortgage deed Doc.No.102/97 – Ex.A.5.

6. 25.03.2003 – Original Receipt Doc.No.755/2003 – Ex.A.6.

7. 25.03.2003 – Original Receipt Doc.No.754/2003 – Ex.A.7.

8. 25.03.2003 – Original Receipt Doc.No.756/2003 – Ex.A.8.

9. 03.12.2017 – Xerox copy of Death Certificate of Subramani Naicker – Ex.A.9.

10. 14.02.2003 – Xerox copy of Legal Heir Certificate – Ex.A.10.

11. 02.12.2017 – Computerised copy of Death Certificate of Unnamalai Ammal – Ex.A.11.

12. 02.12.2017 – Original Legal Notice – Ex.A.12.

13. 21.12.2017 – Original Reply Notice – Ex.A.13.

14. 25.06.1986 – Certified copy of Settlement Deed Doc.No.1764/86 – Ex.A.14.

15. 20.11.1990 – Certified copy of Sale Deed Doc.No.3556/90 – Ex.A.15.

16. 03.05.1993 – Certified copy of Sale Deed Doc.No.1309/1993 – Ex.A.16.

17. 13.06.1997 – Certified copy of Sale Deed Doc.No.1452/1997 – Ex.A.17.

18. 03.08.2018 – Original E.C. from 01.01.1987 to 02.08.2018 – Ex.A.18.

19. 01.08.2018 – Original Guideline Value from SRO-Alandur – Ex.A.19.

(A1, A9 and A10 ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

<u>பிரதிவாதி தரப்புகுறுக்கு விசாரணை</u>

நான் இரண்டாம் வாதியின் கணவர் என்றால் சரிதான். முதல் வாதி அகிலன் என்பவர் 2ம் வாதியின் சகோதரி என்றால் சரிதான். இந்த வழக்கில் முதல் வாதியை சாட்சியாக விசாரிக்க போகிறேனா என்றால் அவசியம் ஏற்பட்டால் விசாரிக்கிறேன். நான் 2ம் வாதி சார்பாக சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு அதிகார கடிதமோ, பவர் பத்திரமோ வழங்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. இவ்வழக்கு பாகப்பிரிவினை கோரி சகோதரிகள், இதர சகோதர, சகோதரிகள் மீது போடப்பட்ட வழக்கு என்றால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு விவரங்களை என் மனைவியும் அவரது சகோதரியும் தான் கொடுத்தார்கள் என்றால் சரிதான். எனக்கு திருமணம் ஆனது 08.06.1989 ஆகும். எனக்கு திருமணம் நடப்பதற்கு முன்பு என் மனைவியின் வீட்டில் நடைபெற்ற ஷியங்கள் குறித்து எனக்கு தெரியாது என்றால் தெரியாது. திருமணத்திற்கு பிறகு நடந்த விவரங்கள் தெரியும். என் திருமணத்திற்கு முன்பு இரண்டு வருடங்களுக்கு முன்பு அகிலாவிற்கு திருமணம் நடந்தது என்றால் சரிதான். எனது முதல் விசாரணை வாக்குமூலம் ஆங்கிலத்தில் உள்ளதை நான் படித்து பார்த்து கையெழுத்து போட்டேனா என்றால் எனக்கு படித்து காண்பித்தார்கள், அதற்கு பிறகு நான் கையெழுத்து போட்டேன், பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான் தான் சொன்னேன். பிரதிவாதிகள் தரப்பில் என்ன எதிருரை தாக்கல் செய்துள்ளார்கள் என்று நான் படித்து பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. வழக்கு சொத்து கிழக்கு மேற்காக 254 அடி உள்ளது என்றால் 240 அடி தான் உள்ளது. நான் தாவா சொத்தை அளந்து பார்த்தேனா என்றால் இல்லை, நேரடியாக தான் பார்த்தேன். தாவா சொத்திற்கு மேற்கு பக்கத்தில் வசந்தா, லட்சுமி, சரஸ்வதி, ஏழுமலை ஆகியோர்களுக்கு தனிப்பட்ட 4 தளம் போட்ட வீடுகள் இருக்கிறதா என்றால் அவர்கள் நால்வரும் என் திருமணத்தின் முன்பு அங்கு தான் இருந்தார்கள். அந்த வீடுகளுக்கு நடுவில் பொது வழி உள்ளதா என்றால் வழி உள்ளது. அந்த வழி 10 அடி உள்ளது

என்றால் வழி உள்ளது, 10 அடி இல்லை.

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை பகுதியாக நிறுத்தப்படுகிறது)

O.S.No.232/2018 P.W.1-விநாயகம் 28.07.2022

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

இவ்வழக்கானது 2 சகோதரிகள், அவர்களுடைய மற்ற சகோதர, சகோதரிகளிடம் தலா 1/9 பாகம் கோரி வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். 2, 3 காரணங்கள் கோரி இந்த பாகப்பிரிவினை கோரியுள்ளார்கள் என்றால் சரிதான். முதல் காரணமாக வாதிகளுடைய தகப்பனார் 1977 முதல் 1997 வரை 3 முறை அடமானம் வைத்தும், இந்த இடைப்பட்ட காலத்தில் 2 முதல் 4 மற்றும் 6 பிரதிவாதிகள் பெயரில் கிரயப்பத்திரங்கள் மற்றும் செட்டில்மெண்ட் ஆவணங்கள் ஏற்படுத்தியுள்ளது தவறானது என்று ஒரு காரணம் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மற்றொரு காரணம் வாதிகளின் தந்தையின் கையெழுத்தை போலியாக பெற்றுள்ளார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் வாதியின் தந்தைக்கு குடிப்பழக்கம் இருந்ததால் அதை தவறாக பயன்படுத்தி கையெழுத்து வாங்கியுள்ளார்கள். வாதியின் தந்தைக்கு குடிப்பழக்கம் உள்ளது என்பதை வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. 3வது காரணம் நானும், 1ம் வாதியின் கணவரும் அடமானம் பைசல் செய்வதற்கு கடன் கொடுத்துள்ளோம் என்று சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு சொல்லவில்லை. இந்த வீட்டு மனையில் 16 வாடகைதாரர்கள் குடியிருந்து மொத்தமாக ரூ.35,000/- வாடகை வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு சொல்லியுள்ளேன். 16 வாடகைதாரர்கள் பேடினில் வாடகைக்கு குடியிருந்து வருகிறார்கள். மேற்படி 16 வாடகைதாரர்களின் பெயர்கள், எவ்வளவு வாடகை கொடுத்தார்கள் என்பதற்கு ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. 1ம் வாதியின் கணவரை சாட்சியாக இந்த வழக்கில் விசாரிக்கிறேனா என்றால் தேவைப்பட்டால் விசாரிப்பேன். தாவா மனையில் உள்ள வீடு ஓட்டு வீடு என்பதால் இடிந்து, இடிந்து விழுந்து 10 வருடமாக எந்த வாடகைதாரரும் இல்லாமல் இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. வாடகைதாரர்கள் இருக்கிறார்கள். தாவா சொத்தை போய் பார்த்தேனா என்றால் நான் வழக்கு தாக்கல் செய்த பிறகு போய் பார்த்தேன். தாவா சொத்தின் வாடகைதாரர்கள் பெயர் பற்றி தெரியுமா என்றால்

தெரியாது. நான் எனது வழக்குரையில் இன்றும் வாடகைதாரர்கள் இருக்கிறார்கள் என்ற சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. வாதியின் தாயார் இறந்து விட்டார். தாவா சொத்தில் உள்ள வீட்டை 2 முதல் 4 பிரதிவாதிகள் மற்றும் 6ம் பிரதிவாதி வாடகை வாங்கி வருகிறார்கள். எவ்வளவு வாடகை வாங்குகிறார்கள் என்றோ, யார், யார் வாடகை வாங்குகிறார்கள் என்றோ எனது வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அதுபோல் வழக்கில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் இருந்த வீடுகள் இடிந்து காலி இடமாக இருக்கிறது என்றும், அதில் வாடகைதாரர்கள் இருக்கிறார்கள் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாடகைதாரர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்த்து வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றும், வாடகைதாரர்கள் இல்லை என்பதால் தான் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. கடந்த கால வாடகை நஷ்டமோ, எதிர்கால வாடகை நஷ்டமோ கேட்க இயலாது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் எனது மாமியார் வாடகை எதுவும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. 2 முதல் 4 மற்றும் 6வது பிரதிவாதிகள் பராமரிப்பில் தான் தாவா சொத்து இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் சர்வே எண்.260/part என்று கொடுத்துள்ளேன் என்றும், 1990ம் ஆண்டிலேயே புது சர்வே எண்.18 வடபாதி 24 தென்பாதி என்றும் பிரிக்கப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.14 செட்டில்மெண்ட் பத்திரம் வா.சா.ஆ.15 முதல் வா.சா.ஆ.17 கிரய பத்திரங்கள் 2 முதல் 4 மற்றும் 6 பிரதிவாதிகள் பெயரில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.14 முதல் வா.சா.ஆ.17 ஆவணங்களின் அடிப்படையில் 2 முதல் 4 மற்றும் 6வது பிரதிவாதிகள் கிரயம் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் அவரவருக்கு பத்திர காலத்திலேயே பட்டா வழங்கப்பட்டுள்ளது என்று தெரிந்தும் நான் அதை வழக்கில் மறைத்துள்ளேன் என்றும் சொன்னால் பட்டா உள்ளது எனக்கு தெரியாது. அந்த இடம்

விற்கவில்லை. புது சர்வே எண் கொடுத்தால் அவர்கள் பெயரில் பட்டா இருப்பது தெரியவரும் என்பதால் தான் புதியதாக தாவா சொத்தில் இல்லை என்பதால் நீதிமன்ற கட்டணம் அதிகப்படியாக கட்ட வேண்டுமென்பதால் அதனை மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.14 முதல் வா.சா.ஆ.17 ஆவணங்களின் அடிப்படையில் வாதிகள் சுவாதீனத்தில் இல்லை என்றும், அதை நான் மறைத்துள்ளேன் என்றும், வாதிகள் கூட்டு அனுபவத்தில் இருப்பதாக சொல்லி குறைந்தபட்ச நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு 12 முதல் 20 வருடங்களுக்கு முன்பாகவே 2 முதல் 4 மற்றும் 6 பிரதிவாதிகள் வீடு கட்டி குடும்பம் இருக்கிறார்கள் என்று தெரிந்தும், பத்திரம் குறித்த விவரம் வாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பிய பிறகு தான் தெரிய வந்தது என்று பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் தவறாகும். என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ள வீடானது லட்சுமி, வசந்தா, சரஸ்வதி மற்றும் ஏழுமலை ஆகியோர்கள் குடியிருக்கிறார்கள் என்றால் அவர்கள் அந்த வீட்டில் இருக்கிறார்கள். எனக்கு திருமணம் ஆவதற்கு முன்பில் இருந்து அங்கு தான் இருக்கிறார்கள். புகைப்படத்தில் காண்பிக்கப்படும் வீடுகளா என்று தெரியவில்லை. வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.5 அடமான பத்திரங்கள் வாதிகளின் தந்தை அடமானம் வைத்ததாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 அடமான பத்திரமானது ஆதம்பாக்கம் ஜென உபகார சாஸ்வத நிதி லிமிடெட் என்ற இடத்தில் அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அதே நிறுவனத்தில் தாய் பத்திரத்தின் பேரில் மீண்டும் 1986ல் வா.சா.ஆ.4ன் பேரில் அடமான கடன் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அதே நிறுவனத்தில் தாய் பத்திரத்தின் பேரில் மீண்டும் 1997ல் வா.சா.ஆ.5ன் பேரில் அடமான கடன் பெற்றுள்ளார் என்றால் சரிதான். 1986 முதல் 1997 வரை அடமான கடன் வாங்கிய காலத்தில் வா.சா.ஆ.14 முதல் வா.சா.ஆ.17 வரை ஏற்படுத்திய ஆவணங்கள் குறித்து நிதி நிறுவனங்களில் சொல்லியுள்ளாரா

என்றால் அது பற்றி தெரியவில்லை. வாதிகளின் தந்தை கடன்களை பைசல் செய்வதற்காகவும், குடும்ப செலவிற்காகவும், மகளின் திருமண செலவிற்காகவும் வா.சா.ஆ.15 முதல் வா.சா.ஆ.17 கிரய பத்திரங்கள் ஏற்படுத்தியுள்ளார் என்றால் ஏற்படுத்தியுள்ளார். 3ம் பிரதிவாதி லட்சுமியின் கணவரின் வைத்தியத்திற்காக இந்த மனையிலிருந்தே அப்பா, அம்மா பார்த்து கொண்டிருந்ததால், வா.சா.ஆ.14 தான செட்டில்மெண்ட் வாதிகளின் அப்பா நல்ல மனநிலையில் விருப்பப்பட்டு 4 சென்ட் எழுதி வைத்து சுவாதீனம் கொடுத்தார்கள் என்றால் அது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. 3ம் பிரதிவாதி தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் வந்த சொத்தில் லோன் வாங்கி வீடு கட்டி, குழாய் இணைப்பு, மின் இணைப்பு சொந்த அனுபவத்தில் அனுபவத்து வருகிறார் என்றும், வாதிகளுக்கு தெரியும் என்றும், எனக்கு தெரியாது என்றும், சகோதரிகளை விசாரித்தால் உண்மை தெரியவரும் என்பதால், சகோதரிகள் விசாரிக்காமல் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. 2, 4 மற்றும் 6 பிரதிவாதிகள் தாங்கள் வேலை செய்த இடத்தில் மற்றும் வங்கியில் லோன் வாங்கி வீடு கட்டியுள்ளார்கள் என்றும், மேற்படி விவரங்கள் அனைத்தும் வாதிகளுக்கு தெரியும் என்றும், மேற்படி வீட்டிற்கு குழாய் இணைப்பு, மின் இணைப்பு, வீட்டு வரி செலுத்தி சொந்த அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்று வாதிகளுக்கு தெரியும் என்றும், வாதிகளை விசாரித்தால் தான் உண்மை தெரியவரும் என்றும் சொன்னால் சரியல்ல. மேற்கு மூளையில் 4 வீடுகளும், நடுவில் 10 அடி பொது வழியும், மின் இணைப்பு, குழாய் இணைப்பு ஆகியவற்றை 2, 4 மற்றும் 6 பிரதிவாதிகள் பெற்று அனுபவித்து வரும் விவரம் எனக்கு தெரியும் என்றும், இவ்வழக்கிற்காக உண்மையை மறைத்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்து காலி மனை என்று தவறாக சொல்லியுள்ளேன் என்றும், அதில் 4 வீடுகள் உள்ளது என்றும், கிழக்கு பக்கமாக என் மாமனார் வீடு உள்ளது என்றும், அதை வழக்கில் மறைத்து விட்டேன் என்றும் சொன்னால் வீடு உள்ளது. 2 முதல் 4 மற்றும் 6வது பிரதிவாதிகள் குடியிருக்கும் 4

வீடுகளை சுப்ரமணி நாயக்கர் தான் கட்டினார் என்றால் கட்டினார். மேற்படி விவரத்தை என்னுடைய வழக்குரை மற்றும் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 2 முதல் 4 மற்றும் 6வது பிரதிவாதிகள் தங்கியுள்ள வீட்டில் நான் பாகம் கேட்கவில்லை என்று சொன்னால் பொதுவில் 1/ 9 பாகம் என்று கேட்டுள்ளேன். 2003ல் என் மாமியார் கடனை பைசல் செய்து விட்டார் என்றால் சரிதான். அந்த பத்திரங்களை என் மாமியார் அவரது மகள்களிடம் ஒப்படைத்து விட்டார் என்று சொன்னால் 2011 வரை என் வசம் தான் பத்திரங்கள் உள்ளது. 11 வருடங்கள் என்னிடம் தான் தாய் பத்திரங்கள் இருந்தது என்று வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. என் மாமியார் தாய் பத்திரங்களை அவரது மகள்களிடம் கொடுத்த விவரம் எனக்கு தெரியும் என்றும் சொன்னால் சரியல்ல. என் மாமியார் அடமான பத்திரங்களை பைசல் செய்வதற்கு நான் பணம் எதுவும் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. வா.சா.ஆ.14 முதல் வா.சா.ஆ.17 ஆவணங்கள் மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றும், என் மாமியார் இருக்கும் போது ஏதாவது கேட்டார்களா என்றால் என் மாமியாருக்கு ஆவணங்கள் எழுதிய விவரம் பற்றியே தெரியாது. வழக்கிற்காக முறையாக, நியாயமாக நடைமுறையில் உள்ள பத்திரங்களை செல்லாது என்று பரிகாரத்தை என்னால் கேட்க இயலாது என்று சொன்னால் தவறாகும். வாடகை வருமானத்தில் வாதிகளின் பெற்றோர்கள் இல்லை என்றும், பிள்ளைகளின் வருமானத்தில் தான் இருந்தார்கள் என்றும் சொன்னால் தவறாகும். வா.சா.ஆ.14 முதல் வா.சா.ஆ.17 ஆவணங்கள் அடிப்படையில் 6772 சதுர அடி மற்றும் 2500 சதுர அடி ஆக மொத்தம் 9235 சதுர அடி மொத்த விஸ்தீரணமான 16560 சதுர அடியில் பொது வழி மற்றும் 4 நபர்களின் மனை 9235 சதுர அடி கழித்தது போக பாகப்பிரிவினை செய்ய தகுதியாக இருக்கின்ற இடம் 7325 சதுர அடி தான் பொதுவில் இருக்கிறது என்றும், அதில் தலா 1/9 பாகம் வழங்குவதில் பிரதிவாதிகளுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றும் சொன்னால்

தவறாகும். வழக்கில் 16560 சதுர அடி என்று வழக்கு சொத்தில் காண்பித்துள்ளது தவறாகும் என்று சொன்னால் சரியல்ல. தரப்பினர்களை விசாரிக்காததால் Adverse Inference வாதிகளுக்கு எதிராகவும், பிரதிவாதிகளுக்கு ஆதரவாகவும் உள்ளது என்பதால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**வழக்கு எண் O.S.No.232/2018 D.W.1**

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.D.கோவர்த்தனகிரி, என்பவரால் வாக்குமூலம் பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் சாட்சியின் வாக்குமூலம் 1873ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | ஏழுமலை | தொழில் |
| த.பெ. | | மதம் |
| கிராமம் | | சாதி |
| வயது | | வட்டம் |

**முதல் விசாரணை - 30.11.2022**

நான் இந்த வழக்கில் 6ம் பிரதிவாதி. இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 1 முதல் 10 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அவற்றை பிரதிவாதிகள் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 20.11.1990 தேதியிட்ட 6வது பிரதிவாதிக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட கிரய பத்திரம் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.1.
2. 20.06.1995 தேதியிட்ட அடமானம் பைசல் செய்த பத்திரம் அசல் பி.சா.ஆ.2.
3. 6வது பிரதிவாதி வீட்டுக்கு பெற்ற வரைபட அனுமதி அசல் பி.சா.ஆ.3.
4. 6வது பிரதிவாதி பெயரில் மின் அட்டை அசல் பி.சா.ஆ.4.
5. 6வது பிரதிவாதி வீட்டுக்கு குழாய் இணைப்பு ரசீது ஜெராக்ஸ் நகல் பி.சா.ஆ.5.
6. 6வது பிரதிவாதி வீட்டுக்கு வீட்டு வரி ரசீது ஜெராக்ஸ் நகல் பி.சா.ஆ.6.
7. வில்லங்க சான்றிதழ் உண்மை நகல் பி.சா.ஆ.7.
8. 6வது பிரதிவாதி வீட்டின் சொத்து வரி ரசீது அசல் பி.சா.ஆ.8.
9. 6வது பிரதிவாதி பெயரில் நகராட்சி சர்வே அசல் பி.சா.ஆ.9.
10. மாதிரி வரைபடம் ஜெராக்ஸ பி.சா.ஆ.10.

(பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.10 ஆவணங்களின் அசல் ஆவணங்களை தாக்கல் செய்யாததால் வாதிகள் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு, ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோ ளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

வாதி எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். வாதி எதற்காக வழக்கு போட்டுள்ளார் என்றால் ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் மற்றும் 3 கிரய பத்திரங்கள் செல்லாது என்று அறிவிக்க கோரி வழக்கு போட்டுள்ளார். நான் 6ம் பிரதிவாதியாகிய எனக்கும், மற்ற பிரதிவாதிகளுக்கும் சேர்த்து சாட்சியம் அளிக்கிறேனா என்றால் மற்ற பிரதிவாதிகளுக்காகவும் தான் சாட்சியம் அளிக்கிறேன். என் பிரமாண வாக்குமூலத்தில் எனக்காக மட்டும் தான் சாட்சியம் அளிப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சுப்ரமணிய நாயக்கர் எனக்கு என்ன வேண்டுமென்றால் எனக்கு மாமனார். என் மனைவி பெயர் கிரிஜா. லட்சுமிக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் குறித்து எனக்கு விவரம் தெரியுமா என்றால் தெரியும். தற்போது சாட்சியிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.14 செட்டில்மெண்ட் பத்திரம் தான் லட்சுமிக்கு எழுதி கொடுக்கப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரம் என்றால் சரிதான். வா.சா.ஆ.14 செட்டில்மெண்ட் ஆவணத்தில் 4 எல்லைகள் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் வடக்கில் குளம், தெற்கில் கிரிஜா, வசந்தா, சரசு, லட்சுமி ஆகிய உனக்கும் சேர்த்து போக, வர வீதியிலிருந்து பொது வழி பாதைக்கு விடப்பட்ட 5 அடி அகல பொது வழி, கிழக்கில் எனக்கு சொந்தமான மனையும், வீடும் மேற்கில் வசந்தாவிற்கு விடப்பட்ட சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளதை ஆவணத்தை பார்த்து சாட்சி கூறினார். வா.சா.ஆ.14ல் பொது வழியாக எவ்வளவு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 5 அடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.14ல் தெற்கு பகுதியில் என் மனைவி கிரிஜாவிற்கு இடம் ஒதுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. எனக்கு எப்பொழுது திருமணம் ஆனது என்றால் 1983ல் திருமணம் ஆனது. நான் திருமணம் ஆனதில் இருந்தே வழக்கு சொத்தில் தான் வசித்து வருகிறேன் என்றால் இல்லை, கிரய பத்திரம் பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து வழக்கு சொத்தில் வசித்து வருகிறேன். வா.சா.ஆ.14ல் தெற்கில் கிரிஜா வசித்து வரும் இடத்திற்கு போக்குவரத்திற்காக 5 அடி இடம் விடப்பட்டது என்றும், வழக்கு சொத்தில் நான் திருமணம் ஆனதிலிருந்து குடியிருக்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.15ம் நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.1ம் ஒரே ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.15 மற்றும் பி.சா.ஆ.1

ஆவணத்தின் அசல் ஆவணம் யாரிடம் உள்ளது என்றால் என்னிடம் தான் உள்ளது. நான் அசல் ஆவணத்தை ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் அசல் ஆவணத்தை தாக்கல் செய்யுமாறு உத்தரவு இட்டிருந்தால் தாக்கல் செய்திருப்பேன். அசல் ஆவணத்தை அடுத்த வாயிதாவில் என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்யமுடியும். பி.சா.ஆ.1 ஆவணத்திற்காக சுப்ரமணிய நாயக்கருக்கு எவ்வளவு பணம் கொடுத்தேன் என்றால் ரூ.41,800/- பணம் கொடுத்தேன். கிரயம் வாங்கும் போது தாவா சொத்து ஏற்கனவே வங்கியில் அடமானத்தில் உள்ள விவரம் குறித்து தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை வாங்கும் போது நான் வில்லங்க சான்றிதழ் போட்டு பார்த்தேனா என்றால் போட்டு பார்த்தேன். அந்த வில்லங்க சான்றிதழை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எந்த ஆவணமாக என் தரப்பில் வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சாட்சி பிரதிவாதி தரப்பு ஆவணங்களை பார்த்து வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்று கூறுகிறார். அடுத்த வாயிதாவில் தாக்கல் செய்கிறேன் என்று கூறுகிறார். இந்த வழக்கில் எதிர் வழக்குரையை வசந்தா தான் தாக்கல் செய்தார் என்றும், நான் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் தனிப்பட்ட முறையில் 6ம் பிரதிவாதி என்ற அடிப்படையில் எதிர் வழக்குரையை தாக்கல் செய்துள்ளேன். சாட்சி மீண்டும் வசந்தா எதிர் வழக்குரையை தாக்கல் செய்ததாக சொல்கிறார். சரஸ்வதிக்கு எழுதி கொடுத்த கிரய பத்திரம் குறித்து தெரியுமா என்றால் தெரியாது. சரஸ்வதிக்கு கிரய பத்திரம் எப்பொழுது பதிவு செய்தார்கள், எவ்வளவு அளவு என்று எனக்கு தெரியும். நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.ஏ. படித்துள்ளேன். சரஸ்வதி எப்பொழுது, எவ்வளவு கிரயம் வாங்கினார் என்றால் 1997ல் 1573 சதுர அடி சரஸ்வதி கிரயம் பெற்றார். அந்த விவரம் எப்படி எனக்கு தெரிய வந்தது என்றால் ஆவணங்களின் அடிப்படையில் எனக்கு தெரிய வந்தது. அந்த ஆவணம் தற்போது சாட்சியிடம் காண்பிக்கப்படும் சரஸ்வதியின் கிரய பத்திரமா என்றால் சரிதான். அந்த ஆவணம் வா.சா.ஆ.17 ஆகும். வா.சா.ஆ.17ல் ஜக்குபந்தியில் பொது வழிக்கு எவ்வளவு என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் வடக்கில் 15 அடி வழி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.17ல் உள்ள சொத்திற்கு செல்வதற்கு 5 அடி வழியா, 10 அடி வழியா அல்லது 15 அடி வழியா

என்றால் 10 அடி வழி ஆகும். வா.சா.ஆ.17ல் 15 அடி என்று குறிப்பிட்டிருப்பது தவறானது என்று சொன்னால் சரியல்ல. உபயோகத்தில் இருப்பது 10 அடி வழியாகும்.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)